இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் நேற்று முன்தினம் (17.6.2024) தமது இல்லத்தில் சென்னை தெற்கு மாவட்டம், சைதை கிழக்குப் பகுதி, கோட்டூர் பொன்னியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த நினைவில் வாழும் எம்.முனுசாமி – எம்.முருவம்மாள் ஆகியோரின் மகன் மாணவர் அணி வட்ட துணை அமைப்பாளர் எம்.மனோகரன் – எம்.பிரியதர்ஷினி ஆகியோரின் திருமணத்தை நடத்தி வைத்தார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், மாவட்ட அவைத் தலைவர் எஸ். குணசேகரன், பகுதி கழக செயலாளர்கள் இரா.துரைராஜ் எம்.சி., எம். கிருஷ்ணமூர்த்தி எம்.சி., வட்ட கழக செயலாளர் கோட்டூர் க.மணி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வே.ஆனந்தம் எம்.சி., பா.அருண்குமார், எம்.பார்த்திபன், உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, காணை தெற்கு ஒன்றியத்தில் விக்கிரவாண்டி தொகுதி வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைப்பதற்காக தேர்தல் பணிமனையை உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி திறந்து வைத்தார். பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாவட்ட பொறுப்பாளர் டாக்டர். பொன்.கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், ஒன்றியச் செயலாளர் கல்பட்டு வி.இராஜா, ஒன்றிய குழுத் தலைவர் கலைச்செல்வி உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

பெரம்பலூர் மாவட்டம் முழுவதும் தொடர் நிகழ்ச்சிகள்!

மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!

பெரம்பலூர், ஜூன் 19 - பெரம்பலூர் மாவட்டத்தில், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது. இது குறித்து பெரம்பலூர் மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு.

19.06.2024 வேப்பூர் வடக்கு ஒன்றியம், அத்தியூர் கிராமத்தில், ஒன்றிய செயலாளர் தி.மதியழகன் தலைமையில் , செந்தில்கணேஷ் ராஜலெட்சுமி நாட்டுப்புற இசைக் கச்சேரியுடன் துவங்கி நடைபெறும் பொதுக்கூட்டத்தில், போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் சிறப்புரையாற்றுகின்றனர்.

20.06.2024 வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியம், கிருஷ்ணாபுரம் கிரா மத்தில், ஒன்றிய செயலாளர் எஸ்.நல்லதம்பி தலைமையில் நடைபெறும் நிகழ்ச்சியில், கொள்கை பரப்பு துணைச் செயலாளர் ச.ந. பெருநற்கிள்ளி, மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், கே.என்.அருண் நேரு.எம்.பி. சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் கலந்து கொண்டு பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி, சிறப்புரை யாற்றுகின்றனர்.

21.06.2024 வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றியம், வேப்பந்தட்டை கிரா மத்தில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில், தமிழ்நாடு பாடநூல் வாரியத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீ சன், கே.என். அருண்நேரு.எம்.பி., சட்ட மன்ற உறுப்பினர் எம்.பிர பாக ரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகின்றனர்.

22.06.2024 பெரம்பலூர் ஒன்றியம், புதிய பேருந்து நிலையத்தில், ஒன்றிய செயலாளர் எம்.ராஜ்குமார் ஏற்பாட்டில், லஷ்மண் சுருதி இன்னிசைக் கச்சேரியுடன் நடைபெறும் பொதுக்கூட்டத்தில், கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா.எம்.பி., போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், கே.என்.அருண் நேரு.எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

23.06.2024 பெரம்பலூர் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில், பெரம்பலூர் அரசுப்பள்ளியில் நடைபெறும் கிரிக்கெட் போட்டி, வாலிபால் போட்டி, கபடி போட்டிகளை துவக்கி வைத்து, வெற்றி பெறுபவர்களுக்கு, தமிழன் பிரசன்னா, மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெ கதீசன், கே.என். அருண்நேரு.எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் எம்.பிர பாகரன் ஆகியோர் கலந்து கொண்டு பரிசுகள் வழங்கி சிறப்புரை யாற்றுகின்றனர்.

24.06.2024 பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில், பெரம்பலூர் நகரத்தில், சுப. வீரபாண்டியன், மதுக்கூர். ராமலிங்கம், மதிவதனி ஆகியோர் தலைமையில் தடைபெறும் கருத்தரங்கம் நிகழ்ச்சியில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், கே.என்.அருண்நேரு. எம்.பி.,பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

25.06.2024 பெரம்பலூர் நகரத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில், கழகத்து ணைப்பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., கலந்து கொண்டு, ஏழை,எளியவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார். இதில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், கே.என். அருண்நேரு. எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

26.06.2024 பெரம்பலூர் மாவட்ட மாணவரணி சார்பில், சின்னமணி ராஜேஸ் வரி திருமண மண்டபத்தில் நடைபெறும் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதை போட்டிகளை துவக்கி வைத்து, மாநில மாணவரணி துணை அமைப்பாளர் அமுதரசன், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெக தீசன் ஆகியோர் கலந்து கொண்டு, வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரை யாற்றுகின்றனர்.

27.06.2024 வேப்பூர் தெற்கு ஒன்றியம் சார்பில், ஒன்றிய செயலாளர் சி. ராஜேந்திரன் தலைமையில், குன்னம் கிராமத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு பாடநூல் வாரியத்தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் ,மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

28.06.2024 பெரம்பலூர் மாவட்ட இளைஞரணி சார்பில்,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் து.ஆதவன் எ)ஹரிபாஸ்கர் தலைமையில் நடைபெறும் ஆங்கில கருத்தரங்கம் நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.எழிலன், மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், கே.என்.அருண் நேரு. எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

28.06.2024 பெரம்பலூர் மாவட்ட மகளிரணி சார்பில், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கம் நிகழ்ச்சியில், திருமதி. அருள்மொழி,பேராசிரியை நாகநந்தினி, மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், கே.என்.அருண்நேரு. எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

29.06.2024 ஆலத்தூர் கிழக்கு ஒன்றியம்,கொளக்காநத்தம் கிராமத்தில், ஒன்றிய செயலாளர் என்.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் தடைபெறும் பொதுக்கூட்டத்தில், சட்டமன்ற கொறடா கோ.வி.செழியன்,போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

30.06.2024 ஆலத்தூர் மேற்கு ஒன்றியம், செட்டிக்குளம் கிராமத்தில், ஒன்றிய பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன் தலை மையில் நடைபெறும் கண் சிகிச்சை முகாமை, கழக சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் சுபா. சந்திரசேகர், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், கே.என்.அருண்நேரு. எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டு துவக்கி வைக்கின்றனர்.

30.06.2024 பெரம்பலூர் மாவட்ட மருத்துவரணி சார்பில், நூத்தப்பூர் கிராமத்தில் நடைபெறும் இலவச மருத்துவ சிகிச்சை முகாமை, கழக சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் சுபா.சந்திரசேகர், மாவட் டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், கே.என். அருண்நேரு.எம்.பி.,சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆகியோர் துவக்கி வைத்து சிறப்புரை யாற்றுகிறார்.

30.06.2024 பெரம்பலூர் நகர கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா நிறைவு பொதுக்கூட்டத்தில், கழக கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி என். சிவா. எம்.பி., கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகிறார். இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், கே.என்.அருண்நேரு. எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் கலந்து கொள்கின்றனர்.

இந்த நிகழ்ச்சிகளில், அந்தந்த ஒன்றிய செயலாளர்கள் மேற்க்கண்ட கூட்டத்தை சிறப்பாக நடத்திட வேண்டும் எனவும், இதில் மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துனை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதி கள், கிளைக்கழக செயலாளர்கள், வார்டு கழக செயலாளர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்று பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர்வீ. ஜெகதீசன் கேட்டுக்கொண்டுள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஏழாஞ்சேரி கெ. வரதன்
ஜூன் 19 (2003)

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, திராவிடர் கழகத்திலும் பின்னர், கழகம் துவங்கிய பின், கிளைச் செயலாளர், செய்யாறு வட்டச் செயலாளர், வெம்பாக்கம் ஒன்றியச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

1977–ல் காஞ்சிபுரத்தில் தலைவர் கலைஞர் தலைமையில் நடைபெற்ற அண்ணாவின் “நீதிதேவன் மயக்கம்” நாடகத்தில் நடித்தவர்.

ஊராட்சி மன்றத்தில் தலைவர், துணைத் தலைவர், கூட்டுறவு சங்கத் தலைவர், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் என பல்வேறு பதவிகள் வகித்தவர்.

பேரறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்ற ‘இந்தி எதிர்ப்பு போராட்டத்தில்’ காஞ்சிபுரம் அருகே உள்ள நத்தப்பேட்டையில் ரயில் மறியலில் ஈடுபட்டு ஆறுமாத கடுங்காவல் தண்டனையை கடலூர் சிறையில் அனுபவித்ததோடு, நெருக்கடி கால மிசாவில் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

வருவாய்த்துறையில் ‘முதலில் வருவோருக்கு முதலில் சேவை’ திட்டத்தில்

‘பட்டாக்களுக்கு ஒரே வரிசை எண்’ எனும் தவறான செய்தி!

வருவாய்த்துறை விளக்கம்!

சென்னை, ஜூன் 19 - வருவாய்த் துறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள “முதலில் வருவோருக்கு முதலில் சேவை” என்ற நடைமுறையில் நேரடி பட்டா மற்றும் உட்பிரிவு பட்டா ஆகிய இரண்டுக்கும் ஒரே வரிசை எண் அளிக்கப்பட்டுள்ளது என்ற தவறான செய்தி குறித்த வருவாய்த் துறையின் அறிக்கை வருமாறு:-

நில உடைமை ஆவணங்கள் கணினிப்படுத்தப்பட்டு “தமிழ் நிலம்” எனும் இணையம் சார்ந்த மென்பொருள் மூலமாக இணையவழி பட்டா மாறுதல் ஆணைகள் வருவாய்த்துறை அலுவலர்களால் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் பொதுமக்கள் தங்களுக்கு அருகில் உள்ள பொது சேவை மையத்திலோ அல்லது இணையவழியில் HTTPS://ESERVICES.TN.GOV.IN என்ற இணைய முகவரியில் பட்டா மாற்றம் கோரி விண்ணப்பம் செய்து பட்டா மாறுதல் உத்தரவுகளை பெற்று வருகின்றனர். இதில் பட்டா மாறுதல் கோரும் மனுவின் மீதான நடவடிக்கையானது குறுஞ் செய்தி (SMS) மூலம் மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது.

பட்டாமாற்றம் கோரும் மனுக்கள் இரண்டு வகைப்படும். ஒன்று உட்பிரிவுடன் கூடிய பட்டாமாற்றம்; மற்றொன்று உட்பிரிவு இல்லாத நேரடி பட்டாமாற்றம். இதன்படி, உட்பிரிவுடன் கூடிய பட்டாமாற்றம் கோரும் விண்ணப்பங்களுக்கும், உட்பிரிவு இல்லாத நேரடிப்பட்டா மாற்றம் கோரும் விண்ணப்பங்களுக்கும் தனித்தனியே வரிசை எண் வழங்கப்பட்டு அவற்றின்மீது உரிய கால அளவில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு வருகிறது. இவ்வரசு பொறுப்பேற்றது முதல், மூன்று ஆண்டுகளில் இணையவழியில் 81.76 இலட்சம் பட்டா மாறுதல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

பொதுமக்களுக்கு இச்சேவைகளை கூடுதலான வெளிப்படைத் தன்மையுடன் விரைந்து வழங்க ஏதுவாக விண்ணப்பங்களைப் பெற்ற வரிசைப்படி தீர்வு செய்யும் நடைமுறை 4.6.2024 முதல் உட்பிரிவு இல்லாத நேரடி பட்டா மாற்றம் கோரும் விண்ணப்பங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

உட்பிரிவு இல்லாத நேரடி பட்டா மாற்றம் கோரும் விண்ணப்பங்களில் “முதலில் வருவோருக்கு முதலில் சேவை” என்ற நடைமுறையில் 4.6.2024 முதல் 16.6.2024 வரை 15,484 பட்டா மாற்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், உட்பிரிவுடன் கூடிய பட்டா மாற்ற விண்ணப்பங்களில் “முதலில் வருவோருக்கு முதலில் சேவை” என்ற நடைமுறை விரைவில் அமல்படுத்தப்படவுள்ளது.

எனவே, இரண்டு வகையான விண்ணப்பங்களுக்கும் ஒரே வரிசை எண் வழங்கப்படுகிறது என்ற செய்தி தவறானதாகும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு வருவாய்த்துறையின் விளக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம் வடக்கு மாவட்டம்

மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல்
தேர்தல் முடிவு

தலைமைக் கழக அறிவிப்பு

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட டாக்டர் ப.சேகர் அவர்கள் மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால்; விழுப்புரம் வடக்கு மாவட்டம், மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, ஜூன் 17 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். “ என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

விழுப்புரம் வடக்கு மாவட்டம், மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கு செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

விழுப்புரம் வடக்கு மாவட்டம், மாவட்ட அவைத்தலைவராக, திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான், தளபதி இல்லம், 59, தேசூர் பாட்டை சாலை, கிருஷ்ணாபுரம், செஞ்சி, விழுப்புரம் மாவட்டம்-604 202. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 17.06.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

கழக மாநில மகளிரணி - மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

ஜெ.ஹெலன் டேவிட்சன் - நாமக்கல் ப.ராணி அறிவிப்பு!

தி.மு.க. மாநில மகளிரணி, மகளிர் தொண்டரணி, பிரச்சாரக்குழு, வலைத்தளக்குழு, ஆலோசனைக்குழு நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் சென்னை - அண்ணா அறிவாலயத்தில், இன்று (19/06/2024 - புதன் கிழமை) மதியம் 12 மணியளவில், மாநில மகளிரணித் தலைவர் விஜயா தாயன்பன் தலைமையிலும், மகளிரணி இணைச் செயலாளர் குமரி விஜயகுமார், மகளிர் தொண்டரணி இணைச்செயலாளர் தமிழரசி ரவிக்குமார் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்துகொள்ள கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்: 1.தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா.
2.கழக ஆக்கப் பணிகள்.

ஜெ.ஹெலன் டேவிட்சன்
மகளிரணிச் செயலாளர்

நாமக்கல் ப.ராணி
மகளிர் தொண்டரணிச் செயலாளர்

கழக தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் வழிகாட்டலின்படி ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சருமான சு.முத்துசாமி. ஆலோசனையின்படி ஈரோடு தெற்கு மாவட்ட கழக நெசவாளர் அணி சார்பில் கழக நெசவாளர் அணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம் தலைமையில் ஈரோடு சூரப்பட்டிவலசு இளைய பாரதம் சிறார் நல மையத்தில் காலை சிற்றுண்டி மற்றும் 10 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள துண்டு, பேஸ்ட், பிரஸ், சோப்பு உள்ளிட்ட பொருட்களை வழங்கினர். நிகழ்வில் மாவட்ட கழக பொருளாளர் ப.க.பழனிசாமி, துணை மேயர் வி.செல்வராஜ், இலக்கிய அணி ஈரோடு இளையகோபால், நெசவாளர் அணி மாவட்ட அமைப்பாளர் என்.எஸ். சந்திரன் மாநகர அமைப்பாளர் கு.கோபால்சாமி. மாவட்டத் துணை அமைப்பாளர்கள் ஆர்.பி.பாலு (எ) பாலசுப்பிரமணி, சதாசிவம், மாநகரத் தலைவர் சண்முகசுந்தரம் மாநகர துணை அமைப்பாளர்கள் மோகனவேல். கண்ணன், தேவராஜ் சுப்பிரமணி, அன்பு, இளமுருகு உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் உள்ளனர்.